சிக்கனமும், பொறுப்புணர்ச்சியும், நிறைய இருக்கு. எனக்கு இதையெல்லாம் பார்த்து பார்த்து சலிச்சுப் போச்சு…எனக்கும் யார் இருக்காங்க நீங்க மூனு பேர்தான்'' என்றார்.

கொஞ்ச நேரத்தில் அவர் நா தழுதழுத்தது. '' எல்லாவற்றையும் எடுத்து நீயே பீரோவிலே அடுக்கிககோம்மா - சாவிகளை நீயே வெச்சுக்கோம்மா, என்றார், கோகிலவாணியின் கண்களில் நீர் வழிந்தது.

இத்தனையும் அறையின் வாசல்படி நிலவருகே நின்று கவனித்துகொண்டிருந்த கிருஷ்ணகாந்த் - ''நல்லா மாட்டிகிட்டியா? வேணும் எனக்கு -!'' என்றார்.

சௌதாமணிக்கு கிருஷ்ணகாந்தின் மேல் பொய்க் கோபம், லேசான சிரிப்பு ஒரு பெருத்த அழுகை எல்லாம் ஒரு சேர வந்தது.

கிருஷ்ணகாந்த் வாய்விட்டு சிரித்தான். இதெல்லாம் ஒங்க வேலையா? என்றாள் கிருஷ்ணகாந்திடம். ''எனக்கு ஒன்றும் தெரியாது'' என்று தலையை ஆட்டினான் கிருஷ்ணகாந்த் பிறகு சிரித்தான்.

இதையேல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சதீஸ் நான்கு வயது சிறுவன் - தனக்கும் எல்லாம் புரிந்தது போல் சிரித்தான்.

இரண்டு மணி நேரம் ஆனது சௌதாமணிக்கு- பீரோவில் அனைத்துப் பொருட்களையும் வைத்து அடுக்கி வைக்கவும்.. பட்டியல் இடவும். பீராவின் சாவிகளை வழக்கம் போல தன் மாமா வைக்கும் இடத்திலேயே வைத்தாள்… அவள் என்ன செய்கிறாள் என்று கூட கிருஷ்ணகாந்த வந்து பார்க்கவேயில்லை. டி.வி. யே கதி என்று கிடந்தான்.

இரவு சிற்றுண்டி முடிந்தது. ஹாலில் எல்லோரும் அமர்ந்திருந்தார்கள். கிருஷ்ணகாந்த் கோவிந்தராசனிடம் மெல்ல பேச்சு கொடுத்தான். ஏம்ப்பா இண்டியன் கிரிக்கெட் டீமுக்கு இரண்டு பாஸ்ட் பௌலர்கள் வேணும்.. இன்னிங்ஸ் ஓபனில் பாஸ்ட் பவுலர் இருந்தாத்தான் மேட்சை நல்லா play பண்ண முடியும். என்றான். '' அட போடா நீயும் உன் கிரிக்கெட்டும் என்று கோவிந்தராசன் பொய்மை வழிய கூறிவிட்டு எழுந்து போய்விட்டார்.

இப்போது சதீஸ் எதுவோ புரிந்துவிட்டது போல் சிரித்தான். அவன் நான்கு வயது சிறுவன்.

# 17.மரணத்தை எண்ணி கலங்கி

வருடம் 1982

இரண்டு வருடங்கள் ஓடியது தெரியவில்லை. சதீஸிஸின் பள்ளிபயணம் துவங்கிவிட்டது. இரண்டாம் வகுப்பு வந்துவிட்டான். ஆங்கில வார்த்தைகள் ஏகத்திற்கும் வீட்டிற்குள் புழங்கி கொண்டிருந்தன. அவனுக்கு சொல்லிக் கொடுக்கும் சாக்கில் எல்லோரும் ஆங்கிலத்திலேலே பேசிப் பழகினார்களோ?

கோவிந்தராசன் மெல்ல தளர்ச்சி அடைய ஆரம்பித்துவிட்டார். உடல் வலுவழந்தது. தடுமாற்றம் ஏற்பட்டது. ஒரு நாள் அது நடந்துவிட்டது. மருத்துவ மனையில் கொடுக்கப்பட்ட சிகிச்சை பலன் எதுவுமின்றி அவர் இயற்கை எய்தி விட்டார்.

மூன்றே மாதம்தான் கோகிலவாணியும் அவர் வழி சென்றுவிட்டாள். புரிதலுக்கு பெயர்போன கிருஷ்ணகாந்திற்கு இது புரியவேயில்லை. மரணம் எப்படி திடீரென்று வந்து தன் தந்தையையும், தாயையும் அள்ளிக் கொண்டு சென்றது , ஏன் என்கின்ற காரணம் மட்டும் அவனுக்கு பிடிபடவேயில்லை..,

மரணத்திற்கு பின் என்ற கேள்விக்கு மட்டும் அவன் போக விரும்பவேயில்லை. விடைகளே தெரியாத கேள்விகள் அவை என முடிவு செய்து வைத்திருந்தான் அவன்.

சடங்குகள் முடிந்துவிட்டன... வந்து இருந்த சுற்றமும் சூழமும் ஊர் திரும்பிவிட்டனர். கிருஷ்ணகாந்த் தளர்ச்சியுடனே அலுவலகம் வந்து போய்க் கொண்டிருந்தான்.

ஒரு முன்னிரவு நேரம். வழக்கப்படி தனிக்கட்டிலில் கிருஷ்ணகாந்த் சாய்ந்தவாறு படுத்துக் கொண்டிருந்தான். இப்போது அவனுக்கு டி.வி சலித்துவிட்டது. கிரிக்கெட் மாட்சுகள் பார்ப்பதோடு சரி. ஞாயிற்றுக்கிழமைகளில் ஒளிப்பரப்பாகும் திரைப்படங்களை பார்ப்பதை அவன் தவிர்த்தான்.

ஹாலில் சௌதாமணி டி.வி.முன் அமர்ந்து கொண்டு வேறு ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து இருந்தாள்.மனம் இரண்டு பக்கமாக இருந்தது. சதீஸ் தூங்கிவிட்டான் அதற்குள். அவனுடைய மிகப் பெரிய ஏக்கம்அவனுக்கு மாலைப் பொழுதுகளில் விளையாடநிறைய நண்பர்களோ,நேரமோ இருப்பதில்லை என்பதுதான்.

அவனுடைய அப்பாவுடன் அறைக்குள் கிரிக்கெட் விளையாட அவனுக்கு பிடிக்கவில்லை. அவனுக்கு வெட்ட வெளியில் - பெரிய மைதானத்தில் ஒடி ஆடி விளையாட வேண்டும்... அவன் குடியிருந்த பகுதியில் ஏது மைதானம்.

எப்போதாவது சௌதாமணி அவனை சிறுவர் பங்காவிற்கு அழைத்துச் செல்வாள். அங்கு சறுக்குப்பாறை என விளையாட்டுக்கள் நடக்கும்.அத்தனைதான்.

கிருஷ்ணகாந்த் அமைதியாக இருந்தான் சௌதாமணி கொஞ்சம் டி.வி யை ஆ.ஃப் செய்துட்டு இங்கே வா– என்றான் என்ன என்று வந்த அமர்ந்தாள் சௌதாமிணி.

கிருஷ்ணகாந்த் "அப்பாவும், அம்மாவும் இப்படி .. போயிட்டாங்க ரெண்டு மூனு வருஷத்திலே ஒரு வீடு வாங்கிடலாம்னு ஆசைப்பட்டுட்டு இருக்கேன். சொந்த வீடு வாங்கி அங்கே அம்மா, அப்பாவை வச்சி .. இப்படி ஆயிடுச்சே என்றான், அவன் கண்களில் தாரை தாரையாக நீர்.

தன் சேலைத் தலைப்பை எடுத்து துடைத்து விட்டாள் சௌதாமணி . "அதை மறந்துடுங்கன்னு எத்தனை தடைவ சொல்றது., ம் சின்ன குழந்தை மாதிரி .." என்றாள். ஆறுதல் சொன்னாள்.

கொஞ்சம் ஆசுவாசிப் படுத்திக் கொண்டான் கிருஷ்ணகாந்த்." கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிக்குங்க. நான் போயி ஒரு காபி போட்டுட்டு வற்றேன். ரிலாக்ஸ், ரிலாக்ஸ் ப்ளீஸ் என்றாள் பின் எழுந்து சென்றுவிட்டாள்.கிருஷ்ணகாந்திற்கு தன் தந்தை, தாய் இருவரும் நினைவுகளும் ஓடின.

"எப்படிபட்ட தாய், தந்தைதனக்கு வந்து அடைந்தார்கள் என நினைத்துக் கொண்டான். . தன்னுடைய சுகமே அவர்களுடைய சுகமாக வாழ்ந்த தந்தையும், தாயும்.. இனி எப்போது எங்கு காணப்போகிறேன்

அவன் கண்கள் சூனியத்தில் நிலைகுத்தின.

# 18. இசையோடு தென்றல் வந்து விளையாடும

வருடம் 1985

அந்த பொன்னாளும் வந்து சென்றது. கிரிக்கெட்விளையாட்டில் இப்போது டெஸ்ட் மேட்சுகளைப் போல,ஒரு நாள் விளையாட்டுப் போட்டிகளும் பிரபலமாகிவிட்டன. புதிய விளையாட்டில் -புதிய விதிகள் - ….. எப்படி எப்படி வைக்க வேண்டும் என்ற விதிகள், … ஆட்டமே சுறுசுறுப்பான மாதிரி அமைப்பிக்கள்… வேகம்.. வேகம்.. வேகம்.. முக்கியமாகிப்போனது. நின்று நிதானித்து ஆடுகின்ற பேட்ஸ்மேன்கள் விட, வேகமாக ரன்களை குவிக்கின்ற பேட்ஸ்மேன்கள் தேவைப்பட்டர்கள். அதே போல் வேகமாக பந்து வீசும் வீரர்களும் தேவைப் பட்டார்கள். நல்ல ………… தெரிந்தவராக இருந்தால் இன்னும் சிறப்பு. தேவை ஆல் ரவுண்டர் என்னும் சூழ்நிலை வந்தது.

காலம் கபில்தேவை கண்டெடுத்துக் கொடுத்தது. விளையாட்டு சூறாவளி உலக கோப்பையையும் இந்தியாவுக்கு வாங்கிக் கொடுக்க தலைமை ஏற்றுவிட்டது.

கிருஷ்ணகாந்திற்கு தானே கோப்பையை பெற்றது போல அத்தனை பெருமிதம். இந்தியா வென்ற நாளில் அந்த சந்தோசம். இப்போது அவன் மகன் சத்தீஸிற்கு ஏழு வயது. என்றாலும் கிருஷ்ணகாந்த் இன்னும் விளையாடுவதை நிறுத்தவில்லை. அவனுக்கு முப்பத்திரண்டு வயது ஆகியிருந்தது. இன்னும் வலைப் பயிற்சிக்கு போண்க் கொண்டிருந்தான்.

ஆனால் முன்போல இப்போது அவன் கம்பெனியின் அணியில், மாவட்ட அணியில் எல்லாம் இல்லை. அவன் விருப்பத்திற்காக பயிற்சிகளுக்கு போய்க்கொண்டிருந்தான். போதும் கிரிக்கெட் விளையாடுவதை நிறுத்திவிடுவது… என்று சொல்ல ஆரம்பித்துவிட்டான்.

கிரிக்கெட் விளையாட்டை நிறுத்த சொன்ன சௌதாமணி -இன்னொரு விஷயத்தை –கிருஷ்ணகாந்தின் இன்னொரு ஆசையை நன்றாக உள்வாங்கி இருந்தாள்..

அது சென்னையில் ஒரு வீடு வாங்குவது.. ஏதோ ஒருமுறை தன் மனக்கிடக்கையை கிருஷ்ணகாந்த் வெளிப்படுத்தினான். அதுவும் தன் தந்தைக்காகவும் தாய்க்காகவும் வீடு வாங்க வேண்டுமென்ற ஆசையை.

ஆனால் சௌதாமணி அதைப் பிடித்துக் கொண்டுவிட்டாள். சிக்கனம் அவளுக்கு கைவந்த கலை. சிறுநகருக்கு போய், தன் தந்தை வீட்டில் இருந்து கொண்டு , பழைய வீட்டை விற்றாள். வங்கிக் கடன் கொஞ்சம் போல

வாங்குவதற்கு ஏற்பாடு செய்தாள். தரகர்களை பிடித்து கட்டிய வீடுகள் கிடைக்கும் இடமாகப் பார்த்து, சொந்தத்தில் ஒரு வீடு வாங்கிவிட்டாள். நல்ல காற்றோட்டமான தனி வீடு கிருஷ்ணகாந்திடம் எப்போதும் டூவீலர் இருந்ததால் வெளியே சென்று வருவதில் ஏதும் சிரமமில்லை.

கிருஷ்ணகாந்தின்புதுமனை புகுவிழா அன்றுதான் நண்பர்கள் நீண்ட நாட்களுக்கு பிறகு சந்தித்து கொண்டாரகள்.

நண்பர்களில் துரை தான் வீடு வாங்கிவிட்ட கதையை சொன்னான் . கண்ணன் தான் வீடு வாங்கப்போகின்ற கதையை சொன்னான். கோபாலன் அடவான்ஸ் கொடுத்து கட்டிடம் கட்டப்பட்டுக் கொண்டிருந்த கதையை சொன்னான்.

சக்தி பெருமாள் மட்டும் சிரித்தார்.''எனக்குத்தான் வீடு ஏற்கனவே இருக்கே.- நம்ம கடையே சொந்த இடத்திலேதான் இருக்கு... அந்த இடத்தோட மதிப்பு இப்ப எக்கச்சக்கமாக ஏறிப்போச்சு.. ஒரு ஊர்லே இருக்கு வீடு. .. என்றார். அறிவுமதி வரவில்லை. எங்கே அறிவுமதி -?என்று கேட்டான் துரை சக்தி பெருமாளிடம். அவருக்குத்தான் அறிவுமதியிடம் தொடர்பு அதிகம் இருந்தது. அதையேன் கேக்கறீங்க என்றார் சக்திபெருமாள். அறிவு முன்போல் இப்போ இல்லை... அடிக்கடி எங்கோ தேசாந்திரம் போயிடறாறு. எங்கே போறாரு, எப்ப வருவாறு உன்றும் சொல்வதே இல்லை. போன் செஞ்சாலும் பதில் இல்லையே. லெட்டர் போடாலும் பதில் இல்லே. அவங்க அம்மா, அப்பா தவறிட்டாங்க. இப்போ ஒத்தை ஆள். அவரே சமைச்சுகிட்டு, அவரே சாப்பிட்டுகிட்டு.. அடிக்கடி ஊரை விட்டு கண்காணாம போயிட்டு.... என்ன வாழ்க்கை?- '' ஒன்றுமே புரியலே என்றார்.

விழாவிற்கு வராத இன்னொருவர் அன்புநம்பி. அவர் முன் எப்போதும் விட, மிக சுறுசுறுப்பான மேடைப் பேச்சாளர். அவர் நேரமே இல்லாத மனிதராக ஆகி இருந்தார்.

# 19. மாற்றம் என்பது மின்னல் கீற்று.

வருடம் 1992

கிருஷ்ணகாந்தின் மகன் நல்ல வளர்ச்சி அடைந்துவிட்டான். பள்ளிப்பாடங்களில் அவன்தான் முதலிடம். பத்தி கூர்மையும், மதிநுட்பமும், விரைவாக ஒன்றை புரிந்து கொள்ளும் ஆற்றலும் அவனிடம் மின்னின.

அவனுடைய மிகநுட்பமான், தீர்க்கமான அறிவாற்றலைக் கண்டு, ~~கீரஷ்ய~~காத்திற்கும் சௌதாமணிக்கும் மட்டட்ற்ற மகிழ்ச்சி. இன்ப குதூகலத்தில் அவர்கள் இருவரும் மிதந்து கொண்டிருந்தார்கள்.

இப்போது சதீஸ்க்கு 14 வயது. கிருஷ்ணகாந்திற்கு அவனையும் தன்னைப்போலவே ஒரு கிரிக்கெட்வீரனாக மாற்றிவிடவேண்டும் என்கின்ற ஆசையும் நிறைய இருந்தது.

இந்திய கிரிக்கெட் உலகம் பல புதிய நட்சத்திரங்களை காணத் துவங்கி இருந்தது. பேட்டிங்கில் சச்சின் டெண்டுல்கரின் வருகையும், பவுலிங்கில் அணில்கும்ப்ளே,யுவராஜ் ஆகியோரின் வருகையும், மக்கள் மத்தியில் கிரிக்கெட் பற்றிய ஈடுபாட்டையும் நம்பிக்கையையும் அதிகப்படுத்தத் துவங்கின.

கிருஷ்ணகாந்தின் வீட்டின் பின்புறம் கொஞ்சம் காலியிடம் இருந்தது. கிருஷ்ணகாந்த் சதீஸ் சிறுவனாக இருந்தபோதேஅவனே அவனுக்கு கிரிக்கெட் ஆட பயிற்சி கொடுப்பான்.

வேறு நண்பர்கள் ரமணன் போன்றோரை அழைத்துவந்து வீடென்று கூடப்பாராமல், பௌலிங் போல் அல்லாமல், நிலத்தில் பந்தை வீசி எகிறச்செய்து- அந்த மாதிரி எகிறும் பந்துகளை எப்படி பாட்டிங் செய்யவேண்டும் என்று பயிற்சிகொடுத்தான்.

Front foot shotsஎனப்படும் ஷாட்களை எப்போது அடிக்க வேண்டும் Back foot shots ஷாட்டுகளை எப்போது அடிக்க வேண்டும் என்கின்ற பயிற்சியையும் கொடுத்தான்.பாட்ஸ்மேன் வரை வருகின்ற பந்துகளை முன்னாடி எடுத்து வைத்தும், பாட்ஸ்மேன்களுக்கு முன்பாக பிட்சாகின்ற பந்துகளை பின்னாடி எடுத்து வைத்தும் லாகவமாக எப்படி அடிக்க வேண்டும் என்றும் சொல்லிக் கொடுத்தான்.

தடுத்து ஆடுவது,டிரைவ் செய்வது,கட் செய்வது, ஸ்வீப் செய்வது. என பலவகையான ஷாட்களையும். வீடிற்குள்ளேயே அவன் பயிற்சி கொடுத்தான்.

சதீஸ்ஸுக்கு 12 வயது வந்தவுடன் கிருஷ்ணகாந்த் அவனை மைதானத்திற்கு அழைத்துச்சென்று பயிற்சி கொடுத்தான்.சிறந்த பௌலரான தனது நண்பர் ரமணன் மூலமாகவும் கிருஷ்ணகாந்த் சத்தீஸ்க்கு பறிற்சி கொடுத்தான்.

ஒரு நாள் மைதானத்தில் காலை முதல் மதியம் வரை பயிற்சி முடிந்தபின்பு ரமணன் கிருஷ்ணகாந்தைப் பார்த்து ''சத்தீஸ் நல்ல பேட்ஸ்மேனாக வருவான். அதில் எந்த சந்தேகமும் இல்லை. உன் கனவு நிறைவேறும்! ''என்றான்.

சத்தீஸ் உடனே ''நான் என் அப்பாவை விட பெரிய பேட்ஸ்மேனாகவும், ஆல்ரவுண்டராகவும் வருவேன்-'' என்றான்..

''சந்தோஷம்டா'' என்றான் கிருஷ்ணகாந்த்.

இரண்டு மூன்று நாட்கள் கழிந்தன. மாதாந்திர மதிப்பெண் பட்டியலில் கிருஷ்ணகாந்தின் கையொப்பத்திற்காக – சதீஸ் கிருஷ்ணகாந்திடம் மதிப்பெண் பதிவுச்சீட்டை (Record sheet) ஐ காட்டினான். பல பாடஙகளில் 100க்கு 100தான். ஒன்றிரண்டு பாடஙகளில் 98 அல்லது 99 மதிப்பெண் வாங்கியிருந்தான். சதீஸ் சௌதாமணிக்கு பெருமை பிடிபடவில்லை .கிருஷ்ணகாந்த் சிரித்த முகத்தோடு கையொப்பம் இட்டான்.

பதிவுச் சீட்டை திரும்ப பெற்றுக் கொண்ட சத்தீஸ் ''நீங்க படிக்கும்போது இத்தனை மார்க் வாங்குவீங்களா?'' என்றான். கிருஷ்ணகாந்த் இல்லையடா என்றான். அப்போ ஒன்னைவிட நான் புத்திசாலி என்றான், சதீஸ.

மேலும் 15 நாட்கள் சென்றன. வெளியே சரியான மழை பெய்து கொண்டிருந்தது. மாலை நேரமானதால் கிருஷ்ணகாந்தும் சதீஸும் சதுரங்கம் விளையாடி கொண்டிருந்தார்கள். இரண்டு மூன்று ஆட்டம் ஆடினார்கள். ஒவ்வொரு முறையும் சத்தீஸே வென்றான். கிருஷ்ணகாந்தால் அவனக்கு இணையாக விளையாட முடியவில்லை.

சதீஸ் பார்த்தியா? நான்தானே ஜெயிச்சேன். ஒன்னைவிட பத்திசாலி.. எப்பவும் நான்தான் எல்லாவற்றிலும் ஒன்னை ஜெயிக்கிறேன்.!'' என்றாள்.

சௌதாமணி குறுக்கிட்டு ஏண்டா அப்பாவை ஒவ்வொரு முறையும் மட்டம் தட்டியே பேசறே. –அது தப்புடா! என்றாள் அதுதான் உண்மை. – நான்தான் புத்திசாலி –அப்பாவை விட புத்திசாலி என்றான் கட்டை விரலை மட்டும் உயர்த்தி வெற்றச் சின்னத்தைக் காட்டினான்.

கிருஷ்ணகாந்த் சௌதாமணியின் மனதில் இலேசாக குமைச்சல் ஏற்பட்டது.

சதீஸ்ஸுக்கு 12 வயது வந்தவுடன் கிருஷ்ணகாந்த் அவனை மைதானத்திற்கு அழைத்துச்சென்று பயிற்சி கொடுத்தான்.சிறந்த பௌலரான தனது நண்பர் ரமணன் மூலமாகவும் கிருஷ்ணகாந்த் சத்தீஸ்க்கு பறிற்சி கொடுத்தான்.

ஒரு நாள் மைதானத்தில் காலை முதல் மதியம் வரை பயிற்சி முடிந்தபின்பு ரமணன் கிருஷ்ணகாந்தைப் பார்த்து "சத்தீஸ் நல்ல பேட்ஸ்மேனாக வருவான். அதில் எந்த சந்தேகமும் இல்லை. உன் கனவு நிறைவேறும்! "என்றான்.

சத்தீஸ் உடனே "நான் என் அப்பாவை விட பெரிய பேட்ஸ்மேனாகவும், ஆல்ரவுண்டராகவும் வருவேன்-" என்றான்..

"சந்தோஷம்டா" என்றான் கிருஷ்ணகாந்த்.

இரண்டு மூன்று நாட்கள் கழிந்தன. மாதாந்திர மதிப்பெண் பட்டியலில் கிருஷ்ணகாந்தின் கையொப்பத்திற்காக – சதீஸ் கிருஷ்ணகாந்திடம் மதிப்பெண் பதிவுச்சீட்டை (Record sheet) ஐ காட்டினான். பல பாடங்களில் 100க்கு 100தான். ஒன்றிரண்டு பாடங்களில் 98 அல்லது 99 மதிப்பெண் வாங்கியிருந்தான். சதீஸ் சௌதாமணிக்கு பெருமை பிடிபடவில்லை .கிருஷ்ணகாந்த் சிரித்த முகத்தோடு கையொப்பம் இட்டான்.

பதிவுச் சீட்டை திரும்ப பெற்றுக் கொண்ட சத்தீஸ் "நீங்க படிக்கும்போது இத்தனை மார்க் வாங்குவீங்களா?" என்றான். கிருஷ்ணகாந்த் இல்லையடா என்றான். அப்போ ஒன்னைவிட நான் புத்திசாலி என்றான், சதீஸ.

மேலும் 15 நாட்கள் சென்றன. வெளியே சரியான மழை பெய்து கொண்டிருந்தது. மாலை நேரமானதால் கிருஷ்ணகாந்தும் சதீஸும் சதுரங்கம் விளையாடி கொண்டிருந்தார்கள். இரண்டு மூன்று ஆட்டம் ஆடினார்கள். ஒவ்வொரு முறையும் சத்தீஸே வென்றான். கிருஷ்ணகாந்தால் அவனுக்கு இணையாக விளையாட முடியவில்லை.

சதீஸ் பார்த்தியா? நான்தானே ஜெயிச்சேன். ஒன்னைவிட பத்திசாலி.. எப்பவும் நான்தான் எல்லாவற்றிலும் ஒன்னை ஜெயிக்கிறேன்.!" என்றாள்.

சௌதாமணி குறுக்கிட்டு ஏண்டா அப்பாவை ஒவ்வொரு முறையும் மட்டம் தட்டியே பேசறே. –அது தப்புடா! என்றாள் அதுதான் உண்மை. – நான்தான் புத்திசாலி –அப்பாவை விட புத்திசாலி என்றான் கட்டை விரலை மட்டும் உயர்த்தி வெற்றச் சின்னத்தைக் காட்டினான்.

கிருஷ்ணகாந்த் சௌதாமணியின் மனதில் இலேசாக குமைச்சல் ஏற்பட்டது.

“ இவன் ஏன் இப்படியே பேசுகிறான்? என்று வேதனைப்பட ஆரம்பித்தாள். இந்த வேதனை உணர்வு ஒருபுறம் இருந்தாலும் தன் மகன் புத்திகூர்மை மிக்கவன். என்கின்ற உணர்வு வேர்கள் இருவர் மனதிலும் மகிழ்ச்சியை ஏற்படுத்தின.

# 20. இனி பாதை வேறு பயணமும் வேறு

வருடம் 1999

ஒன்பது வருடங்கள் ஓடிப்போனது தெரியவில்லை. சத்தீஸ் இப்போது கல்லூரி படிப்பை முடித்திருந்தான். அவன் இப்போது M.B.A படிப்பில் பட்டம் பெற்றவன். கணிணி கல்விகளையும் கற்றுத் தேர்ந்து இருந்தான். பட்டபடிப்பு முடிந்தவுடன் பம்பாயில் ஒரு ஹாஸ்டலில் தங்கி பட்ட மேற்படிப்பிற்காக வெளியூர்களில் தங்கி அவன் முடித்திருந்தான்.

கிருஷ்ணகாந்த் செலவைப் பார்க்காமல் அவனை படிக்க வைத்து இருந்தான். சத்தீஸ் கல்லூரிக்கு சென்று படிக்க ஆரம்பித்ததும்விளையாட்டுக்களில் ஈடுபடுவதை முற்றிலும் விட்டுவிட்டான். எந்நேரமும் அவனுக்குப் படிப்புத்தான். மற்றவர்களுக்காக நாவல்களை படிக்க ஆரம்பித்து இருந்தான். தமிழ் மற்றும் ஆங்கில நாவல்களை விரும்பி படிக்க ஆரம்பித்தான்.

தன் உடலை – திடகாத்திரமாக வைத்து கொள்வதற்காக, உடற்பயிற்சி சாதனங்களைவீட்டிலேயே வாங்கி வைத்துக் கொண்டு, உடலை அவன் பராமரித்துக் கொண்டான். சமயம் கிடைக்கும் போதெல்லாம் அவன் நடைபயிற்சி மேற்கொண்டான்.

அவன் உணவுப் பழக்கங்கள் முற்றிலுமாக மாறி இருந்தன.அவன் வடஇந்திய பாணியிலே உணவுகள் உட்கொள்ளஆரம்பித்தான் கொஞ்சம் மேற்கத்திய பாணியும் கூட

இப்போது படிப்பு முடிந்து வீட்டிற்கு திரும்பியிருந்தான். வேலைக்கான விண்ணப்பம் அனுப்பியிருந்தான். நம்பிக்கையோடு இருந்தான்.

இப்போது சௌதாமணிக்கு இரட்டிப்பு வேலை. கிருஷ்ணகாந்திற்காக ஒரு தனி சமையல் செய்ய வேண்டும். ஒவ்வொரு வேலையும் இரட்டிப்பாகி இருந்தது.

ஒருநாள் சௌதாமணி சத்தீஸ்ஸின் போக்கு குறித்து கிருஷ்ணகாந்திடம் மிகவும் வேதனைப் பட்டு பேசினாள். இவன் போக்கே பிடிபடவில்லை. நம்ம ஊர் பழக்க வழக்கத்தையே மறந்துவிட்டான்.அதுகூட போகட்டும் . நம்ம ரெண்டு பேருக்கும் வயசாகிட்டே வர்றதுங்கறது கூடவா புரியலை….. கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிட்டுப் போனாத்தான் என்னவாம்.

கிருஷ்ணகாந்த் அவனுக்கு ஒரு வேலை கிடைச்சா சரியா போகும் ,என்றார். எதிபார்த்த அந்த நல்ல நாள் வந்தது. சத்தீஸ்ஸுக்கு வேலை

கிடைத்துவிட்டது.சென்னையிலேயே வேலை. எடுத்த எடுப்பில் 25,000க்கு மேல் சம்பளம். .. பல படிகள். அலுவலகத்திற்க அழைத்து போக வேன் வசதி. , இத்யாதி., இத்யாதி.

சத்தீஸ்ஸின் தினசரி போக்கு- மிகவும் மாற்றமடைந்தது. காலை 8.30 மணிக்கு விட்டைவிட்டு கிளம்பி விடுவான். இரவு 7 மணிக்கு மேல்தான் வருவான். சில நாட்கள் இரவு 9 மணிகூட ஆகும்.

கிருஷ்ணகாந்த்தும் காலை 8.30 மணிக்கு பறப்பட்டு கிட்டத்தட்ட சத்தீஸ் வரகின்ற நேரத்திற்கு வருவான். தந்தையும் மகனும் உட்கார்ந்து பேசுவது ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும்தான் என்று ஆனது.

சௌதாமணிக்கு அவர்கள் இருவரும் அலுவலகம் போகும் வரை பம்பரமாய் வேலை. பிறகு தொலைக்காட்சி. புத்தகம் .. இவர்கள்தாம் நண்பர்கள். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களிடம் சமயத்தில் பேசுவாள்., என்றாலும் ஒரு சலிப்பு உணர்வு அவளுக்கு ஏற்படலாயிற்று. என்ன வாழ்க்கை இது என்று இயந்திர கதியில் என்ற எண்ணம் உருவானது.

இப்போது கிருஷ்ணகாந்த் கிரிக்கெட் விளையாடுவதை முற்றிலுமாக நிறுத்திவிட்டான். ஒருமுறை அவனுக்கு வலது கையில் எலும்புமுறிவு ஏற்பட்டது. கிரிக்கெட் விளையாட்டின் போது பல தடைவ அவன் அடிபட்டிருந்தாலும் இந்த முறை அடி பலமாகபட்டது. மூன்று மாதம் வீட்டிலேயே இருந்தான் கிருஷ்ணகாந்த்.

எனவே கிரிக்கெட் விளையாடுவதை அறவே விட்டுவிட்டான் அவன். பிறர்க்கு பயிற்சி அளிப்பதற்கு கூடஅவன் மைதானத்திற்கு போவதில்லை.

இந்நிகழ்வு சத்தீஸ்ஸுக்கு வேலை கிடைப்பதற்கு முன்பாகவே நிகழ்ந்துவிட்டது.

எனவே ஞாயிற்றுக்கிழமைகளில் வீடே கதி என்று கிடந்தான். எப்போதாவது நண்பர்களின் சந்திப்பிற்காக ~~வரு~~போவான் கிருஷ்ணகாந்த். சில சமயம் அவன் நண்பர்கள் மோகனராவ்,பன்னீர்செல்வம் போன்றோர்கள் வீட்டிற்கு வந்துவிடுவார்களை. மணிக்கணக்கில் அலுவலகம், சினிமா, கிரிக்கெட் அரசியல், பங்குமார்க்கெட் என பல விஷயங்கள் அலசப்பட்டன.

மீதிநாட்களில் தொலைக்காட்சியே அவன் கதி. ஏதாவது மேட்ச் பார்த்துக்கொண்டே சினிமா பார்த்துக் கொண்டே இருப்பான்.

சத்தீஸ் ஞாயிற்றுக்கிழமைகளில் கூட வீட்டில் தங்குவது கிடையாது.காலை டிபன் கூட பெரும்பாலும் வீட்டில் சாப்பிட மாட்டான். காலை 8 அல்லது 9மணிக்கு படுக்கையை விட்டு எழுந்திருப்பான். காலைக்கடன்களை

முடித்துவிட்டு ஒரு காபி சாப்பிட்டுவிட்டு போய்விடுவான் - வெளியே நண்பர்கள் , ஹோட்டல்,பிக்னிக் சினிமா..என பொழுதை உல்லாசமாகவே கழிப்பான் அவன். இரவு 9 மணிக்கு வீட்டிற்கு வருவான் . வந்தவுடன் கொஞ்சம் டி.விக்கு பிறகு தூக்கம். .. இரவு உணவு வீட்டில் கிடையாது.

மாதங்கள் உருண்டன. வேலை கிடைத்தவுடன் சத்தீஸ்ஸின் போக்கு இன்னும் மாற்று திசையில் வேகமாக நடந்தது. ஓய்வில்லாமல் பங்கு மார்கட் சிந்தனை வேறு அவனுக்கு… புத்தகங்கள் படிப்பது கூட அபூர்வமாய் இருந்தது அவனுக்கு.

ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை வழக்கம் போல் சத்தீஸ் வீட்டில் இல்லை. வருவதற்கு இரவு 10 மணிக்கு மேல் ஆகும் என சொல்லிவிட்டு போய்விட்டு இருந்தான். கிருஷ்ணகாந்த் சௌதாமணியை அழைத்தான். …‘‘என்னங்க - என்று கேட்டுக் கொண்டே அவன் அருகே சோபாவில் அமர்ந்தாள்.

‘நாம ரெண்டு பேரும் இப்போ மெரீனா பீச்சுக்கு இப்போ போறோம்.. புறப்படு., என்றான், கிருஷ்ணகாந்த்.’’சரி’’ என்று புறப்பட்டுவிட்டாள் சௌதாமணி.

மெரீனா கடற்கரையில் கொஞ்சம் உட்புறம் தள்ளிஈரமணல் காலில் பட்டும் படாதது போல் இருக்கும் ஓர் இடத்தில் கிருஷ்ணகாந்த் சௌதாமணி இருவரும் அமர்ந்திருந்தார்கள். அருகில் அதிகமாக ஜனங்கள் இல்லை. கடல் அலைகள் வந்து நிலத்துடன் பேசிவிட்டு போய்க் கொண்டிருந்தன. கடலின் அலைகளுக்கு நிலமும் பதில் சொல்லி சொல்லி ஓய்ந்து போயிருந்தது.

கிருஷ்ணகாந்த் பேச்சை ஆரம்பித்தான். ‘‘என்ன சௌதாமணி வர வர நீ ரொம்ப சோர்வா இருக்கியே என்ன விஷயம்.’’ என்றான். சௌதாமணி என்னங்க சொல்றது. எல்லாம் சத்தீஸ் விஷயம்தான். ., கொஞ்சம் கூட வீட்டோட ஒட்டறதே இல்லை. என்னமோ வற்றான் -போறான் சத்திரம் மாதிரி நெனைச்சுட்டு இருக்கான். ஒக்காந்து ஒருநாள் உங்ககூடவும் எங்கூடவும் போசறானா? -ஒன்றுமே புரியலைங்க.

கிருஷ்ணகாந்த் லேசாக சிரித்தான்...அப்படித்தான் இருப்பான். எல்லாம் கொஞ்ச நாளில் சரியாய் போய்விடும் என்றாள். பிறகு அவனே தொடர்ந்தான்.‘‘தோ பாரு சௌதாமணி சத்தீஸைப் பற்றி தான் நல்லாவே விசாரிச்சுட்டேன்..ஒரு தப்பும் இல்லே.!’’ குடி, சிகரெட் பெண்கள் சகவாசம் எதுவும் அவனுக்கு இல்லே..!’’ என்றான். அவனுக்கு வாழ்க்கையிலே ரொம்ப மேலே வரனும்னு ஆசை இருக்கு. அவன் பிரண்ட்ஸ் எல்லாமே டாப் லெவலே இருக்காங்க.. படிச்சவங்களா இருக்காங்க. ஒரு தப்பும் இல்லே…! என்றான்.

“இது சரி! ஞாயிற்றுக்கிழமை கூட வீட்டிலே இருக்கக் கூடாதா? ஒரு வாய் வீட்டிலே சாப்பிடக்கூடாதா?” என்றான்.

“அவன் அன்னிக்கு எத்தனை எங்கேஜ்மெண்ட் வைச்சிருக்கானோ என்னவோ? இன்னும் எந்த நல்ல வேளைக்கு.. நிறைய சம்பளத்துக்கு முயற்சி செய்யறானோ? யார் யாரையோ போய் பார்க்கிறானோ அவன் வழியிலேயே முன்னேறட்டும்” என் சிபாரிசை கூடஅவன் விரும்பலை அவன் முயற்சிலேயே அவன் மேலே வரனும்னு ஆசைப்படறான். நல்லதுதான்-! என்றான்.

சௌதாமணி ஒரு பெருமூச்சு எறிந்தாள். பின் அவனுக்கு பெண் பார்த்துடலாமா? கல்யாணம் செஞ்சு வெச்சுடலாமா? என்றாள்.

பின் கிருஷ்ணகாந்த் ஒருவருஷமோ ரெண்டு வருஷமோ போகட்டும் என்றான். பின்அவனே-“உன்கிட்டே ஒரு முக்கியமான விஷயம் பேசப் போறேன்.இப்போ நம்மகிட்டே எவ்வளவு பணம் இருக்கும் F.D எல்லாம் சேமிப்புப் படி சேர்த்துக் கேக்கிறேன்.. என்றான் “ஒரு 60, 70 ரூபாய்க்கு (லட்சம்) வரும் என்றாள் சௌதாமணி. எல்லாம் சேமிப்புதான். உங்க அப்பா கொடுத்துவிட்டு போன பணம், வீடு வித்து வந்த பணம், எதையும் நான் தொடவேயில்லை, அப்படியே சேமிச்சுட்டேன். எதையும் நான் தொடவேயில்லை. ஆப்படியே சேமிச்சுட்டேன். வட்டி வட்டிக்கு வட்டின்னு அது சேந்துட்டே வந்தது.

இப்போ உங்களுக்கு நல்ல சம்பளம். நல்லா மிச்சமாகுது. நானென்ன செலவு பண்றேன்?” என்றாள். திடீரென்று .. இதை எதுக்கு கேக்கறீங்க? என்றாள்.

கிருஷ்ணகாந்த் நான் V.R.S.கொடுத்திடலாம்னு இருக்கேன். பணமும் கிடைக்கும். ஏதோ கொஞ்சம் பென்சனும் கிடைக்கும். நம்ம செலவுக்கு போதும் அவன்(சத்தீஸ்) செலவுக்கு அவன் சேமித்து வச்சுகிடட்டும்.

ஏங்க ஒடம்புக்கு முடியலையா என்றாள் சௌதாமணி. இல்லே சௌதாமணி சலிச்சுடுச்சு. மிஷின் மாதிரி ஓடி ஓடி வேலை செய்யவே பிடிக்கலை.கொஞ்சம் ரிலாக்ஸ்டா வீட்டோட இருக்கலாம்னு பார்க்கிறேன், என்றான்

ஓங்க இஷ்டம் போல செய்யுங்க. இனிமேலாவது கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க என்றாள்.பின் அவளே தொடர்ந்தாள். “ஏங்க ரிட்டையர்மெண்டுக்கு அப்புறம் நான் இப்படியே வீட்டுக்கு உழைச்சுட்டே இருக்க மாட்டேன். என்னை நாலு இடத்துக்கு கோவில் குளம்னு கூட்டிட்டு போங்க. முதல்லே கும்பகோணம் பக்கம் போகலாம். நவக்கிரக கோயிலுக்கு போகனும்னு ரொம்ப நாளாஆசை.

கண்டிப்பா போவோம். இனி உங்கூடத்தான் வாழ்க்கை...! ஆபீஸ், கிரிக்கெட் எதுவும் இல்லை.. தௌதாமணி மட்டும்தான். சத்தீஸ் மட்டும்தான். என்றான்.

தௌதாமணியின் கண்கள் பனித்தன. மின்னின. அவள் தன் கைகளால் அவன் கைகளை பற்றிக் கொண்டாள். நீண்டநேரம் அவர்கள் இருவரும் அமைதியாக அமர்ந்திருந்தார்கள்.

# 21. இன்னும் என்ன என்ன வேண்டும்

வருடம் 2000

கிருஷ்ணகாந்த் பணியில் இருந்து ஓய்வு பெற்றபின் தன் வாழ்க்கையின் முறையினை மாற்றிக் கொண்டிருந்தான். சில மாதம் அவன் வீட்டிலேயே அடைந்து கிடந்தான். ‘‘சௌதாமணி, சௌதாமணி’’ என்று அவளையே சுற்றி சுற்றி வந்தான், புதிதாக திருமணம் ஆனவன் போல. சௌதாமணிக்கே சில நாள் பொறுக்காது. ‘‘ எங்கேயாச்சும் வெளியே போயிட்டு வாங்க. சினிமா பிரண்ட்ஸ் அப்படின்னு போயிட்டு வாங்க. என்று துரத்துவாள் அவள். கிருஷ்ணகாந்த் அசையமாட்டான். மாலை நேரத்தில் சிலநண்பர்கள் மோகன்ராவ் போன்றோரை பார்த்துவிட்டுவருவான். அ த்தோடு சரி.

சௌதாமணியின் விருப்பம்போலவே அவளை பல ஊர்களுக்கும் கோவில்களுக்கும் அழைத்துச் சென்றான். திருச்சி மலைகோட்டையில் தொடங்கி, தஞ்சை, கும்பகோணம் நவக்கிரகக் கோயில்கள், சைவ வைணவ ஸ்தலங்கள், சிற்ப வேலைப் பாடுகள் நிறைந்த பட்டீஸ்வரம், அம்மன் கோவில்கள்.. ஒன்று விடவில்லை அவர்கள்… வாரக்கணக்கில் பயணம். அங்கங்கு லாட்ஜில் வாசம். நல்ல உணவுகள்.மணிக்கணக்கில் கோவில் வராந்தாக்களில் அமர்ந்து பேசுதல் என ஒரு பக்கம் ஒரு புதிய வாழ்க்கை சுழற்சி போய்க் கொண்டிருந்தது.

சத்தீஸ்க்கு திருமணம் செய்து முடித்துவிட்டு, அகில இந்திய யாத்திரைகள்போக வேண்டும் என்பது இருவரின் திட்டமாக இருந்தது.

இப்போது தமிழ்நாடு, கேரளம்,ஆந்திரம் சுற்றிப்பார்த்து விட்டார்கள். சௌதாமணி நினைத்தால் திருப்பதி போய் பார்த்துவிட்டு வருவதுதான் இருவருக்கும் வேலை.

சத்தீஸ் இப்போது வேறு நல்ல வேலைக்கு மாறியிருந்தான். ஒரு தனியார் கம்பெனியில் உயர்மட்ட வேலை. பல டிப்ளமோக்கள் வாங்கியருந்ததால் , அவனுக்கு உயர் பதவிகள் சுலபமாக கிடைத்தது. மாதம் 50,000 ரூபாய்க்கு மேல் சம்பாதித்தான். அவன் சிலருக்கு financial counseling advice என்றும் செய்து கொண்டிருந்தான். ஷேர் மார்கட் சுழற்சி வேறு. அவன் கையில் பணம் துள்ளியது.

மாதம் 25,000 கிருஷ்ணகாந்திடம் கொடுத்துவிடுவான். ‘‘ எனக்கு எதுக்குடா பணம்? என்பான் கிருஷ்ணகாந்த் ‘‘இங்கே கொடு என்று சௌதாமணி வாங்கிக் கொள்வாள். ‘‘அவன் கணக்கில் தனியே வை என்பான் கிருஷ்ணகாந்த். சௌதாமணி சிரிப்பாள் வேறு ஒன்றும் பேசமாட்டாள்.

அவளுக்கு இருந்தஆசை , கனவு, பிரார்த்தனை எல்லாம் சத்தீஸ்க்கு நல்ல மனைவி வந்து வாய்க்க வேண்டும் என்பதுதான்.

சத்தீஸின் போக்குகளிலும் இப்போது சில மாற்றங்கள் ஏற்பட்டு இருந்தன. ஞாயிற்றுக்கிழமைகளில் கூட வீட்டில் தங்கினான். என்றாலும் கிருஷ்ணகாந்திடமோ, சௌதாமணியிடமோ அதிகம் பேச்சில்லை யாருடனாவது தொலைபேசியில் பேசிக் கொண்டே இருப்பான். அல்லது கம்யூட்டர் சிஸ்டம் முன் உட்கார்ந்து இருப்பான். சில சமயம் அவன் அறையில் அவன் பர்சனல் டி.வி ஓடிக்கொண்டிருக்கும். அவன் தூங்கிக் கொண்டிருப்பான்.சௌதாமணி போய் நிறுத்திவிட்டுவருவாள்.

ஒரு சமயம் சௌதாமணிக்கு சிறுநகர் ஊருக்குப் போய் தன் தாய், தந்தை, சகோதரன்மார்களோடு தங்கிவிட்டு வரலாம் என்கின்ற எண்ணம் ஏற்பட்டது. கிருஷ்ணகாந்திடம் ‘‘ஏங்க ஒரு வாரம் நகரம் போய் அம்மா வீட்டில் இருக்கலாம்னு தோனுது- நீங்க என்ன சொல்றீங்க?’’ என்று கேட்டாள். கிருஷ்ணகாந்த் ‘‘அதுக்கு என்ன போனால் போகிறது!’’ என்றான்

எதற்கும் சத்தீஸையும் கேட்டுறலாம் என்று நினைத்தவளாக சௌதாமணி சத்தீஸின் அறைக்குச் சென்று அவனிடம் ‘‘ஒரு வாரம் நானும், அப்பாவும் உன் தாத்தா வீட்டிலே இருந்துட்டு வர்றோம்’’ என்று கூறினாள். ‘‘அதுக்கு என்ன போய்ட்டு வாங்க என்றான் சத்தீஸ்.’’ ‘‘நீயும் வாடா! ஒரு மாறுதலாய் இருக்கும்’’ என்றாள் சௌதாமணி. எனக்கு ‘‘ எங்கம்மா நேரம்?’’ என்றான் சத்தீஸ்.

சத்தீஸை பொறுத்த அளவில் அவனை தனியே விட்டுவிட்டு போவதில் எந்த பிரச்னையும் இல்லை அவனுக்கு. இப்போது எல்லாம் அவனுக்கு ஓட்டல் உணவுகள் சலித்து விட்டன. கிருஷ்ணகாந்தும் - சௌதாமணியும் ஊரில் இல்லாவிட்டால் அவனே கூட சில சமயம் சமைத்து சாப்பிட ஆரம்பித்து இருந்தான். சௌதாமணிக்கு உடல்நலம் சரியில்லையென்றால் கிருஷ்ணகாந்த் சமைப்பான். அவனுக்கு சமையல் வேலைகள் செய்வதில் இப்பொழுது மிகவும் விருப்பம்.

வீட்டுப் பராமரிப்பு வேலைக்கு என ஒரு பெண்மணி வந்து கொண்டிருந்தாள். பெயர் முனியம்மா. வீட்டைச் சுற்றிலும் உள்ள தோட்டங்களை பராமரிக்க வாரா வாரம் ஒருவன் வந்து போய்க் கொண்டிருப்பான். பெயர் முனுசாமி இருவரும் கணவன் மனைவியர்.

திட்டமிட்டபடி சிறுநகருக்கு கிருஷ்ணகாந்த் சௌதாமணி இருவரும் வந்து சேர்ந்தார்கள். முதல் நாள் முழு ஓய்வு. வீட்டு மாடியில் தனி அறையில்

கிருஷ்ணகாந்த் அப்படி தூங்கிக் கழித்தான். சௌதாமணிக்கு அவள் அன்னையிடம் பேசவே நேரம் போதவில்லை.

அடுத்த நாள் மாலை சௌதாமணியின் தந்தை மயூரநாதன் தாய் தேவயானை இருவரும் ஹாலில் அமர்ந்திருந்தார்கள். சௌதாமணியின் ஒரே சகோதரர் ரத்தினவேல். அவன் மனைவி வசந்த கோகிலம், சௌதாமணியின் மற்றொரு சகோதரி கண்மணி, அவள் கணவன் வைத்தியநாதன் ஆகிய ஆறு பேரும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். நீண்ட நேரம் அவர்கள் பேசினார்கள். பேசி முடித்ததும் மாடியில் தனி அறையில் இருந்த கிருஷ்ணகாந்தையும் சௌதாமணியையும் தேவயாணி அழைத்து வந்தாள்.

கூடத்தில் கிருஷ்ணகாந்தும் சௌதாமணியும் அறுவரோடு எண்மராக அமர்ந்து கொண்டார்கள். மயூரநாதன் பேச ஆரம்பித்தார். அவர் பெரிய செல்வந்தர். "அம்மா சௌதாமணி நாங்க எல்லாம் பேசி முடிச்சுட்டோம். எங்களுக்கு வயசு ஆகிட்டது. பாகபிரிவினை பேசி முடிச்சுட்டோம். உன் பங்குக்கு கொஞ்சம் 4ஏக்கர் தோப்பு , ரொக்கம் 20 இலட்சம் நகை 50 பவுன் அப்புறம் இந்த வீடு அப்புறம் மத்தவங்களுக்கு …"

சௌதாமணி இது எல்லாம் எங்களுக்கு எதுக்கப்பா? ஒன்னுமே வேண்டாம். என்றான். மயூரநாதன் அப்படி சொல்லக்கூடாது .. எல்லாம் பரம்பரை சொத்து.. நான் பிரிச்சு கொடுத்திடறேன். என் சம்பாத்தியமே நிறைய இருக்கு. அதை நான் வச்சுக்கறேன். பண விஷயத்திலே ஒரு கஷ்டமும் இல்லேம்மா..!" என்றார்.

கிருஷ்ணகாந்த் ஒன்றும் பேசவில்லை. எழுந்து செல்ல முயற்சித்தான். மற்றவர்கள் அவர்களை வலுக்கட்டாயமாக உட்கார வைத்தார்கள். பேச்சு தொடர்ந்தது. ஒரு சண்டை சச்சரவு இன்றி – அவரவர் விருப்பம் போல பெரியவர் மயூரநாதன் சொத்துக்களை பிரித்து கொடுத்து விட்டார்.

பாகப்பிரிவினைகள் முறைப்படி முடிந்தன. சௌதாமணியின் தாய்வழிச் சொத்துக்கள் அனைத்தும் சௌதாமணி பெயருக்கே மாற்றப்பட்டன. கிருஷ்ணகாந்திற்கு அதில் மிகுந்த சந்தோசம். கிருஷ்ணகாந்திற்கு மயூரநாதன் விருப்பப்பட்டு நகைகள் ரொக்கம் கொடுத்தார். கிருஷ்ணகாந்த் அதன் முழு விவரங்களை கூட தெரிந்து கொள்ளவில்லை. அத்தனையையும் சௌதாமணியிடம் ஒப்படைத்து விட்டான்.

சௌதாமணி தந்தையிடமும், தாயிடமும் "அம்மா –அப்பா நீங்களும் எங்ககூட சென்னைக்கு வந்திடுங்க. - இங்கே என்ன பண்றீங்க?" என்றாள்.

இல்லேம்மா நாங்க இந்த வீட்லேதான் இருக்கப் போறோம். இது உன் வீடு ஆனா நாங்க ரொம்ப நா இன்னும் ரொம்ப இங்கேயே இருப்போம்..'' என்றான் சிரித்துக் கொண்டே!

''இருங்கப்பா ரொம்ப நாள் இருங்க! '' என்றாள். ஓரிரு நாட்கள் கழிந்தன. பின் அனைவரும் சௌதாமணி விருப்பத்திற்கேற்ப , ஒரு வேன் வைத்துக் கொண்டு பழனி, குருவாயூர், சோட்டாணிக்கரை என பல வழிபாட்டுத்தலங்களுக்கு சென்றார்கள்.

பிறகு அவரவர் பிரிந்தனர். கிருஷ்ணகாந்திற்கும் சௌதாமணிக்கும் அப்படி ஒரு நிறைவு!

# 22 .அந்த நாள் ஞாபகம்...

வருடம் 2000

சிறுநகரை விட்டு, சென்னைக்கு வர கிருஷ்ணகாந்திற்கு மனமேயில்லை.அந்த ஊரின் சீதோஷ்ணநிலை அப்படிப்பட்டது. எப்போதும் மாலையானால் குளிர்ந்த காற்று. மிதமான வெயில்.. மழைக்காலங்களில் சாரல் மழை...அதுதான் சிறுநகரம்.

கிருஷ்ணகாந்த் வீட்டிலேயே தங்கவேயில்லை. ஒரு மொபட்டை எடுத்துக் கொண்டு, வீதி வீதியாக சுற்றினான். நடந்து பல வீதிகளுக்கு சென்றான். அவனுடைய சொந்த வீடு இருந்த பகுதிக்கு சென்றான்.கை மாறியிருந்த வீடு உரு மாறியிருந்தது. விளையாடிய கோவில் மைதானம் அப்படியே இருந்தது. கிரிக்கெட் பழகிய ஆரம்ப கால மைதானங்களை போய் பார்த்தான்.

இடங்களை பார்க்க பார்க்க பழைய நண்பர்கள் நினைவுகள் வந்தது. துரை. கோபாலன், கண்ணன், அறிவுமதி, சக்திபெருமாள், அன்புநம்பி எனப்பட்டியல் .. விசுவநாதன் மட்டும் என்ன ஆனான் என்று தெரியவில்லை. அத்தனை பேரின் தொடர்பும் இப்போதும் கிருஷ்ணகாந்திற்கு இருந்தது. நேரில் சந்திப்புக்கள் இல்லை என்றாலும், தொலைபேசியின் மூலமும், கடிதங்கள் மூலமும்தொடர்ந்து இருந்தது. அறிவுமதிதான் அடிக்கடி தேசாந்திரம் போய்விடுவார்.ஊரில் இருந்தால் தொடர்பு கொள்வார். புனித ஸ்தலங்களுக்கு சென்று மாதக்கணக்கில் தங்குவது அவருக்கு வழக்கமாக இருந்தது. அதே துறவு நிலை.

மற்ற நண்பர்கள் அனைவருக்கும் இப்போது திருமண வயதில் மகன் அல்லது மகள் இருந்தார்கள். யாரும் தாத்தா ஆகிவிடவில்லை.

நண்பர்களில் அன்பி நம்பி மட்டும் சிறுநகரிலேயே இருந்தார். பரம்பரையாக விவசாயி ஆன அவர் கொஞ்சம் செல்வந்தராகவும் இருந்தார்.

கிருஷ்ணகாந்திற்கு அவரை சந்திக்க வேண்டும் என்ற எண்ணம் உதித்தது. அந்த முற்பகல் வேலை தொலைபேசியில் தொடர்பு கொண்டான் அவரை அவன்.‘‘உடனே புறப்பட்டு வாங்க கிருஷ்ணகாந்த்’’என்றார் அவர். பத்தே நிமிடத்தில் புறப்பட்டு விட்டான் கிருஷ்ணகாந்த். அன்புநம்பியின் வீட்டில் அன்புநம்பி தன் அறையில் இருந்தார். ஒரு புத்தக அலமாரி. அதில் நிறைய இடதுசாரி தத்துவ பத்தகங்கள், பொருளாதர புத்தகங்கள்..ஒரு கம்யூட்டரும், இன்னொரு மேஜையும் அந்த அறையில் இருந்தது.

கிருஷ்ணகாந்தைப் பார்த்ததும் ''வாங்க –வாங்க'' கிருஷ்ணகாந்த் என்று எழுந்துவந்து வரவேற்றார் அன்புநம்பி..இருவரும் கை குலுக்கிவிட்டு வசதியாக அமர்ந்தார்கள். குடும்ப விவகாரங்கள் பேசி முடிக்கப்பட்டன.

கிருஷ்ணகாந்த் மெல்ல பழைய நினைவுகளை பேச ஆரம்பித்தான். அன்புநம்பி இடைமறித்தார். ''பழைய நண்பர்கள் எல்லோரும் ஒருமுறை சந்தித்தால் என்ன? பின் கிருஷ்ணகாந்த் தோட்டத்திலே ஒரு வீடு எடுத்திருக்கிறேன். மாடியிலே எல்லா வசதியும் இருக்கு. ஒரு நாளோ ரெண்டு நாளோ அங்கேயே தங்குவோம். மணிக்கணக்கா மனம் விட்டு பேசுவோம். எல்லோருக்கும் போன் போடுங்க.. வற்றவங்க வர்றட்டும். கூப்பிடுங்க'' இப்பவே கூப்பிடுங்க.'' என்றார். கிருஷ்ணகாந்த் அனைவரையும் தொலைபேசியில் அழைத்தான். துரை, கண்ணன், கோபாலன், சக்திபெருமாள் , அறிவுமதி அனைவரும் அடுத்தநாள் வரஒப்புக் கொண்டார்கள்கண்ணன் டெல்லியிலிருந்தும், கோபாலன் பெங்களூரிலிருந்தும் பறப்பட் சம்மதித்தார்கள்.சக்திபெருமாள் சேலத்திலிருந்தும், அறிவுமதி அவர் கிராமத்திலிருந்தும் வர ஒப்பு கொண்டார்கள்.

வருகின்ற நண்பர்கள் தங்குவதற்கு ஏற்பாடுகள், இரண்டு நாளுக்கு அவருக்கு வேண்டிய உணவுகள் என அனைத்தையும் அன்பு ,நம்பியும், கிருஷ்ண காந்தும். பட்டியலிட்டார்கள்....

பழைய நினைவுகளில் இருவரின் நெஞ்சும் நெகிழ்ந்து மகிழ்ந்தன.

# 23. எதை செய்தோம்? எதை செய்யவில்லை?

வருடம் 2001

அது பெரிய கூடம் அதில் நண்பர்கள் கிருஷ்ண காந்த், துரை கோபாலன், கண்ணன், அறிவுமதி, சக்திபெருமாள், அன்புநம்பி அனைவரும் கூடிவிட்டார்கள்.

அறிவுமதியின் முகத்தில் இப்போது தாடி இல்லை. நெற்றி நிறைய திருநீறும் இல்லை. ஒரு கீற்றுப் போல திருநீறு வைத்திருந்தார் முகத்தில் இளமையும் ஜொலிப்பும் இருந்தது. அவரைத் தவிர அனைவருக்கும் உடல் பருத்திருந்தது. சக்திபெருமாளுக்கு அதிகமாகவே. அறிவுமதிதான் பேச்சை ஆர்ம்பித்தார். யாருமே – உடற்பயிற்சி, யோகா எதுவும் செய்யறதில்லே போலிருக்கு …ஒடம்பு எல்லோருக்கும் பருத்திருக்கு .. நிறைய நடைபயிற்சி போங்க என்றார்.

துரை கிருஷ்ண காந்த் இத்தனை சீக்கிரம் ஏன் V.R.S. கொடுத்துட்டீங்க என்று கேட்டான். நண்பர்கள் அனைவரும் துருவி துருவிக் கேட்ட கேள்வி அதுதான். சலித்துவிட்டது என்ற பதிலையே திருப்பி திருப்பிச் சொன்னான் கிருஷ்ண காந்த்.

சொந்தப் பொருளாதரம், நாட்டின் பொருளாதரம் போக்குகள். விலைவாசி ஏற்றம்,குடும்ப நலன்கள்,மகன் அல்லது மகள்களின் திருமணம்,- இன்னும் நல்ல வேலை வாய்ப்புக்கள் என்று பேச்சுக்கள் போய்க் கொண்டிருந்தது.

அன்புநம்பி பேச்சின் போக்கை மாற்றினார். என்ன- கிருஷ்ண காந்த்! இப்பவும் சிவாஜிகணேசன் நடிக்கறாரு பார்த்தீங்களா? தேவர் மகன் படம் பார்த்தீங்களா?"முதிர்ச்சியான நடிப்பு" என்றார்.. கிருஷ்ணகாந்த். பார்க்காமல் இருப்பேனா என்ன நடிப்பு அது? என்றார். கோபாலன் "என்ன கிருஷ்ணகாந்த் இப்போ பழைய சிவாஜிகணேசன் படத்தையெல்லாம் டெக்கிலே, கம்ப்யூட்டரிலே, திரும்ப திரும்ப பார்க்கிறியா?" என்றான். எல்லோரும் சிரித்தார்கள். கிருஷ்ணகாந்த் அவர் நடிச்ச எல்லா படத்தோட விவரங்களையும் Collect செய்யறேன். அவரைப் பற்றிய புத்தகமும் நிறைய சேமிச்சுட்டேன்." என்றார் துரை "என்ன - சிவாஜிகணேசன் நடிப்பு.. ஓவர் ஆக்ஷன் மிகையோ மிகை " என்றான். கிருஷ்ண காந்த் அமைதி காத்தான்.

அதற்கு சக்திபெருமாள் பதில் கூறினார். சிவாஜிகணேசன் டிராமா ஸ்டேஜில் இருந்து வந்தவர். அதனாலே அந்த மிகையான நடிப்பு ,இயற்கையானது, அவராட நடிப்பிலே பரதநாட்டியம், கதக்களி, மணிப்புரி

ஸ்டைல் எல்லாம் கலந்திருக்குன்னு சொல்றாங்க. அவர் ஒரு பிறவிக் கலைஞர். அதிலே சந்தேகமே இல்லை. பாவம்? தமிழ் நாட்டிலே பிறந்துட்டாரு. அவர் நினைச்ச இடத்துக்கு உயர முடியலே. ஆனா அவரோட படத்தை ஒட்டு மொத்தமா பார்த்தோம்னா ஒரு வளர்ச்சியை நாம பார்க்க முடியும் .. அவருடைய குரல் அவருக்கு ஒரு பிளஸ் பாயிண்ட். நவரசம் கொஞ்சும் அவர் நடிப்பிலே .. முதல்லே சமூக சீர்திருத்தப் படம்,சரித்திரப்படம், பின்னாலே புராணப்படம், குடும்ப பாசம் பொங்கற படங்கள், அப்பறமா அப்பா, அண்ணன்ங்க படங்கள் , நடுவிலே பாரதி, கப்பலோட்டிய தமிழன், இப்படி தேசபக்தி பாத்திரங்கள்..கௌரவம் சிவாஜிக்கும், வசந்த மாளிகை சிவாஜிக்கும், வியட்நாம் வீடு சிவாஜிக்கும், எத்தனை வித்தியாசம்?'' என்றார்.

அன்புநம்பி குறுக்கிட்டார். ''அவருடைய அரசியல் வாழ்க்கை?'' என்றார். ''அதைப் பத்தி நாம பேசவே வேண்டாம்!'' என்றார் சக்திபெருமாள். அன்புநம்பி விடவில்லை அவருடைய சமகால நடிகர்கள் M.G.R., ஜெமினிகணேசன், முத்துராமன், T.S. பாலையா, நாகேஷ்,S.V. ரங்காராவ் எல்லோரும் சாதனை செஞ்சவங்கதானே என்றார்... அதிலென்ன சந்தேகம்! என்றார் சக்திபெருமாள்.

அன்புநம்பி தொடர்ந்தார். எனக்கு ஒரு வருத்தம் இருக்கு. தமிழ் சினிமாவிலே, ஏன், இந்திய சினிமாவிலே, அவங்களோட ஆதிக்கம்தானே அதிகம்... ஒரு நடிகர் பல வருஷம் நடிகராய் நடிக்க முடியுது. ஜனங்க ஏத்துக்கிறாங்க. ஒரு நடிகை சீக்கிரமா வாய்ப்பை இழந்துடறாங்க .. இல்லாட்டி அம்மா வேஷம், அக்கா வேஷம்.. இப்படி மைனர் ரோல்கள்.. என்றார்.

உண்மைதான் என்றார் சக்திபெருமாள், அறிவுமதி எதுவுமே பேசவில்லை. துரை சக்திபெருமாளைப் பார்த்து .. 'நீங்க கவிதை எல்லாம் எழுதிட்டு இருந்தீங்களே இப்போ என்ன செய்யறீங்க? ஏதாச்சம் புத்தகம் வெளியிடறீங்களா? என்றார். சக்திபெருமாள் ''அதுக்கு நேரமே இல்லை'' பிஸினஸ்.. பிஸினஸ்.. இப்போ துணிக்கடையும் வச்சிருக்கேன்னா, நேரம் அதுக்கே நேரம் சரியாப் போகுது.. ஆனா நேரம் கிடைக்கும் போதெல்லாம் நிறைய படிக்கிறேன்..'' என்றார்.

அன்புநம்பி அறிவுமதியைப் பார்த்து '' என்ன சார் நீங்க ஒன்னுமே பேசமாட்டேங்கறீங்க.. நீங்க பக்திப ாட்டெல்லாம் எழுதறீங்களா? என்றார். அறிவுமதி அமைதியாக ''பக்தி மட்டும் அல்ல, யோகா, தத்துவம் எல்லாம் எழுதறேன். சின்ன சின்ன பத்தகங்கள் எழுதி இலவசமா கொடுத்தடறேன். இதிலே என்ன வேடிக்கைன்னா, ஊருலே சிலபேரு அருள்வாக்கு கேட்டிட்டு வந்துடறாங்க. அதுதான் கஷ்டமா இருக்குன்னு சிரித்தார் அன்புநம்பி ''அது சரி

விவசாயத்திலே வருமானம் கிடைக்குதா என்று கேட்டார்.'' நான் விவசாயம் பார்க்கறத இல்லே. குத்தகைக்கு வட்டுட்டேன். சொந்த வீடு இருக்கு. எனக்கு வருமானமே இல்லேன்னாலும், ஊர்க்காரருங்க என்னை விட்டுட மாட்டாங்க. எல்லோருக்கும் நான் சாமி! அப்படித்தான் கூப்பிடுறாங்க.. அவுங்களே என்னை பார்த்துப்பாங்க!.. அப்புறம்.. பசியும் பட்டினியும் என்னை ஒன்னும் பண்ணாது!'' என்றார். எல்லோரும் அமைதியானார்கள்.

பேச்சு கிரிக்கெட்டின் மீது போனது.கோபாலா! டெண்டுல்கர் நல்ல பிரைட் ஸ்டார். ''சமீபத்திலே பத்மஸ்ரீ அவார்டு கூட வாங்கியிருக்காரு. நிச்சயம் நம்பிக்கை நட்சத்திரம்தான்''

கிருஷ்ணகாந்த்''சந்தேகமேயில்லை!'' என்றான். அவன் டெண்டுல்கர் விசிறி.

அன்புநம்பி குறுக்கிட்டார்.''கிரிக்கெட்டைப் பற்றி கொஞ்சம் பேசனும் என்றார். ''இந்திய கிரிக்கெட் மற்ற எல்லா விளையாட்டையும் வளர விடாம செஞ்சிருச்சு. ஒலிம்பிக்கிலே, ஹாக்கிலே எப்பவோ தங்கபதக்கம் வாங்கினோம். அது பழைய கதை ஆயிடுச்சு.'' மற்ற எந்த ஸ்போர்ட்ஸும் மாறலை. .. அது மட்டும் அல்ல. கிரிக்கெட் பிளேயர்ஸ் நாட்டுக்காக வெளையாடலை. சொந்த ரெக்காடுக்காக விளையாடறாங்க. .. இப்ப காசு வாங்கிட்டு விளையாடற மாதிரி தெரியுது. அமட்ச் பிஞ்ச்சில் என்றார்...

''எல்லா துறையும் கெட்டுவிட்டது.'' என்றான் கிருஷ்ணகாந்த். பேச்சு நீண்ட நேரம் நீடித்தது. பேச்சின் முடிவில் அறிவுமதி கிருஷ்ணகாந்தின் அருகில் வந்தார். தன் கைப்பையில் இருந்து திருநீறு எடுத்தார்.... கிருஷ்ணகாந்தின நெற்றியில் இட்டார். .. ''உங்களுக்கு ஒரு கெடுதலும் வராது.. நீங்க நல்லா இருப்பீங்க!'' என்று சொன்னார். பிறகு கண்களை மூடிக்கொண்டு மௌனம் காத்தார். கிருஷ்ணகாந்தின் மனதில் ஏன் அறிவுமதி தனக்கு மட்டும் அடிக்கடி இப்படி சொல்கிறார் என்ற கேள்விகள் எழுந்தன.

# 24. குடும்பவிளக்கே வருக

இனியும் காலம் தாழ்த்தக் கூடாது என சௌதாமணி முடிவு செய்தாள்… சதீஸ்ஸுக்கு திருமணம் செய்துவிட வேண்டும் என்பதுஅவளுடைய துடிப்பாக இருந்தது. கிருஷ்ணகாந்திடம் எப்போது பார்த்தாலும் அதையே பேசினாள். நச்சரிக்கத் தொடங்கினாள். கிருஷ்ணகாந்தும் அவள் நியாயங்களை புரிந்து கொள்ள ஆரம்பித்தான். அவனுக்கிருந்த ஒரே தயக்கம், சதீஸ்ஸின் மனதில் இது குறித்து என்ன இருக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை என்பதுதான்.

சதீஸ்ஸோ, கிருஷ்ணகாந்துடன் அமர்ந்து பேசுவது என்பதுவே மிக குறைவாகவே இருந்தது… அவன் அலுவலக வேலைகள்,

பிற பணிகள், அவன் நட்புவட்டம்,.. வீட்டில் தனிஅறை, தனி டி.வி. தனி கம்ப்யூட்டர், தனி போக்குகள்,.. எல்லாமே தனிதான்.

ஒரு ஒட்டுதலே இல்லாதது போலவே அவன் இருந்தான்.

சௌதாமணி விடவில்லை. ‘‘நீங்கள் அவனிடம் பேசிப்பாருங்கள்’’ அவன் யாரையாவது மனதில் வைத்து இருந்தால், அந்த பெண்ணையே பேசி முடித்துவிடுவோம். இப்படி ஒட்டுதலே இல்லாமல் இருக்கிறானே …’’என்றாள்.

கிருஷ்ணகாந்ததும் சரி ‘‘பேசி விடுகிறேன்’’ என்றான். அது காலை நேரம் 7.30 மணி இருக்கும்.சத்தீஸ் அலுவலகத்துக்கு புறப்பட்டுக் கொண்டு இருந்தான்… அவன் அறைக்குள் கிருஷ்ணகாந்த் சென்றான். ‘‘சத்தீஸ் இன்னிக்கு சாயந்திரம் கொஞ்சம் சீக்கிரமே வாப்பா, உன்னிடம் நிறைய பேசனும்’’ என்றான். சத்தீஸ் ‘‘ ஒரு 7 மணிக்கு எல்லாம் வந்து விடுகிறேன்.’’ என்றான்… அத்தனைதான். புறப்பட்டுவிட்டான்.

மாலை 7.00 மணி எப்போது ஆகும் என்று கிருஷ்ணகாந்தும், சௌதாமணியும் காத்து கொண்ட இருந்தார்கள். சௌதாமணியிடம் ஒரு பதட்டமும், துடிப்பும் இருந்தது. கிருஷ்ணகாந்த் அமைதியாக இருந்தான்.

மாலை 7 மணி ஆனது. சொன்னநேரத்திற்கு எல்லாம் சத்தீஸ் வந்துவிட்டான். ஆடைகளை மாற்றிக் கொண்டு வழக்கமான தன் பணிகளை முடித்துக் கொண்டு 7.3 மணி போல் ஹாலில் கிருஷ்ணகாந்தின் முன்னால் சோபாவில் அமர்ந்தான். ‘‘என்னப்பா- என்ன விஷயம்? சொல்லுங்க என்றான்.

கிருஷ்ணகாந்த் ‘‘ஒன்னுமில்லே உனக்கும் வயசாயிட்டே போகுது’’ உனக்கு ஒரு கல்யாணம் பண்ணலாம்னு இருக்கோம்.. பெண்பார்க்க

ஆரம்பிக்கனும். உன் மனசுலே என்ன அபிப்பிராயம் இருக்கு, சொல்லு என்றான்.

சத்தீஸ் கொஞ்சம் யோசித்தான். ''பிறகு சரிப்பா.. உங்க இஷ்டப்படி செஞ்சுடுங்க, என்றான். சௌதாமணி உன் மனசுலே என்ன இருந்தாலும் வெளிப்படையாகவே சொல்லிடு.. நீ சந்தோசமா இருக்கனும் எனக்கு அதுதான் முக்கியம்'' என்றாள்.

சத்தீஸ் சிரித்தான். பிறகு பெண் M.B.A இல்லாட்டி C.A படிச்சுருக்குனும். Financial advice அல்லது Business advice செய்யத் தெரிஞ்சவளாயிருக்கனும் . ஒன்னு ஏதாவது Company - இந்தமாதிரி – Excutiveவா இருக்கனும். இல்லாட்டி சொந்த Profession செய்ய Confidence இருக்கனும். அதுதான் முக்கியம், என்றான்.

சௌதாமணியும் கிருஷ்ணகாந்தும் மேலும் மேலும் பேசிக் கொண்டே இருந்தார்கள். அவர்கள் சுற்றி -சுற்றி என்ன பேசுகிறார்கள், எதைப்பற்றி பேசுகிறார்கள் என்பது சதீஸ்ஸுக்கு புரிந்து விட்டது. நேரிடையாகவே பதில் சொல்லி விட்டான் சத்தீஸ். ''அம்மா! யாரையும் மனசிலே நினைச்சுட்டு இல்லே, நீங்களே பாருங்க … என் கூட பிஸினஸுக்கு ஒத்தாசையா இருந்தா வாழ்க்கை நல்லா இருக்கும்னு பார்க்கிறேன்… 'அத்தனைதான்', என்றான்.

சத்தீஸ் சொல்வதில் நியாயமும் அர்த்தமிருப்பதாக சௌதாமணி கிருஷ்ணகாந்த் இருவரும் உணர்ந்தார்கள். ''அப்படியே பார்ப்போம்'' என்றான் கிருஷ்ணகாந்த். ''அப்ப - ஒரே விஷயம், எல்லா விஷயங்களையும் நீங்களே பார்த்துக்கங்க. ஒவ்வொரு விஷயத்துக்கும் என்னை கேக்கனும்னு அவசியமில்லை. எனக்கு நேரமேயில்லை –புரிந்து கொள்ளுங்கள் -! என்றான்.

மேட்ரிமோனியல்கள், பத்திரிகை, விளம்பரங்கள், டி.வி. சேனல்கள், வளம்பரங்கள்,தரகர்கள், ஜாதக பரிவர்த்தன மையங்கள் இப்படி ஒன்று விடவில்லை கிருஷ்ணகாந்த். சல்லடை போட்டு சலித்தான். சௌதாமணிக்கும் இதே வேலை.. ஒன்றுக்கு இரண்டு, இரண்டுக்கு மூன்று என்று சோதிடர்களிடம் அலைந்தார்கள்.

தினசரி கடிதங்கள் குவிந்தன. பல ஜாதகங்கள் குவிந்தன. பொருளாதார ரீதியில் நல்ல பிண்ணனி உள்ள, பெற்றோர், உடன்பிறந்தோர், நல்ல வேலை வாய்ப்பில் இருந்த M.B.A படித்த ஒருபெண், அழகும் அமைதியும், தோற்றமும் கொண்ட ஒரு பெண் ''அர்ச்சனா'' என்ற பெயர் - கிருஷ்ணகாந்திற்கும், சௌதாமணிக்கும் மிகவும் பிடித்து விட்டது.

ஜாதகங்களை வரவழைத்துப் பார்த்தார்கள். பொருத்தங்கள் நன்கு அமைந்தன.

அவ்வப்போது கிருஷ்ணகாந்ததும் சௌதாமணியும் தாங்கள் பார்க்கும் பெண்கள் பற்றிய தகவல் சொல்லிக் கொண்டே இருந்தார்கள். ''அர்ச்சனா''வைப் பற்றிய தகவல்களை கூறினான்.கிருஷ்ணகாந்த் .. நல்லா பெண்ணாத் தெரியறா M.B.A படிச்சிருக்கா.. நல்ல இடம்.. நீ என்ன சொல்றே? என்றார் சத்தீஸிடம். ஒரு நாள் சத்தீஸ் சரிப்பா பார்க்கலாம் என்றான்.

முறைப்படி போய் பெண் பார்த்தார்கள். சதீஸ்ஸுக்கும் விருப்பம். .. அர்ச்சனாவுக்கும் விருப்பம். இருவரும் தனிமையிலும் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டார்கள்.

கிருஷ்ணகாந்ததும் அர்ச்சனாவின் தந்தை சம்பத்தும் நிச்சயதார்த்தத்துக்கு நாள் குறித்து விட்டார்கள்.

நிச்சயதார்த்தம் உறவின் முறை கூட்டம் அனைத்தும் கூட, நண்பர்கள் புடைசூழ -இனிதே முடிந்தது.

நிச்சயித்த நாளில், மிகவும் ஆடம்பரமும் இல்லாமல் மிகவும் எளிமையும் இல்லாமல் .. சத்தீஸ் - அர்ச்சனா திருமணம் நடந்தது.

அர்ச்சனா வீட்டிற்கு மருமகளாய் வந்துவிட்டாள். கிருஷ்ணகாந்த் சௌதாமணிக்கு இருப்புக் கொள்ளவில்லை.

# 25. சின்னக் கண்ணன் சிரிக்கிறான்.

வருடம் 2013

காலம் வேகமாக நகர்ந்தது.அர்ச்சனா தனியாக வேலைக்கு போகவில்லை. சத்தீஸ் Financial consultancy, Business consultancy அலவலகம் ஒன்றை ஆரம்பித்து விட்டான். அலுவலக நிர்வாகத்தை அர்ச்சனா கவனித்துக் கொண்டாள். சத்தீஸ் அவ்வப்போது ஆலோசனைகள் மட்டும் கூறிக் கொண்டிருந்தான். அவர்களுக்கு துணையாக C.A படித்த பட்டயத் தணிக்கையாளர் ஒருவரும் இருந்தார். இரண்டு மூன்று அலுவலக உதவியாளர்கள், கம்ப்யூட்டர் உதவியாளர்கள் தொழில் மெல்ல மெல்ல விரிவடையத் தொடங்கியது.

அர்ச்சனா நல்ல சுறுசுறுப்பு ... வார்த்தைகள் மென்மையான வார்த்தைகள்தாம், ஒரு புன்சிரிப்பு, எதற்கெடுத்தாலும் ஒரு புன்சிரிப்பு இதுதான் அர்ச்சனா.

காலையில் 8.30 மணிக்கெல்லாம் அவள் அலுவலகம் புறப்படுவாள். அதற்குள் சௌதாமணிக்கு சமையல் அறையில் என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்துவிடுவாள். "அர்ச்சனா இதைச் செய் - அர்ச்சனா அதைச் செய்" என்று அவளுக்கு யாரும் எதையும் சொல்ல வேண்டியதே இல்லை. அவளே குறிப்பறிந்து பணியாற்றுவாள். அதே சமயம் அதிகமான வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்யமாட்டாள். எல்லாவற்றிலும் ஒரு கச்சிதம். .. ஒரு கணக்கு..திட்டமிடல் - இது அர்ச்சனா

மதிய உணவு தயாரிக்கும் பொறுப்பு சௌதாமணியுடையது. மதியம் என்ன-என்ன உணவு என்பதை கூட அர்ச்சானாவே முடிவு செய்து சொல்லி விடுவாள். , சௌதாமணி அதை தயாரித்து வைப்பாள். ஆட்கள் வந்து மதியம் கேரியரில் அர்ச்சனாவுக்கும், சத்தீஸுக்கும் உணவு எடுத்துக் கொண்டு போவார்கள்.

இரவு உணவு வீட்டில்தான். சத்தீஸ் விருப்பப்படி ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு வருவதை அர்ச்சனா தடுத்துவிட்டாள். எத்தனை நேரமானாலும் வீட்டில் வந்து சாப்பிட வேண்டும் என்ற கண்டிப்பு சத்தீஸுக்கு . பசியாற இடையில் ஏதாவது சாப்பிட்டுக் கொள்ளலாம். .. அவ்வளவுதான். சத்தீஸும் இரவு 9 மணிக்கு வீட்டிற்கு வர ஆரம்பித்து விட்டான். அர்ச்சனா வருவதற்கும் மணி 9 ஆகிவிடும்.

இரவு உணவின் போது மட்டும் அனைவரும் ஒன்று கூடி உண்பார்கள். அர்ச்சனா அப்போது மனம் விட்டு பேசுவாள். அலுவலகத்தில் ஏதாவது

சுவையான நிகழ்ச்சி நடந்திருந்தால் அதைச் சொல்வாள். டி.வி நிகழ்ச்சிகளைப் பற்றி பேசுவாள். கலகலப்பாக பேசிக் கொண்டே இருப்பாள்.

சத்தீஸ் பெரும்பாலும் அமைதியாகத்தான் இருப்பான்.எப்போதாவது கொஞசம் அரசியல் பேசுவான். அதோடு சரி. .. மற்றபடி தொழில் விருத்தி எப்படி இருக்கிறது , என்ன சம்பளம், என்ன சேமிக்கிறான், எந்த கணக்கு வழக்கும் கிருஷ்ணகாந்திடமோ சௌதாமணியிடமோ பேசமாட்டான்.

மாத செலவுக்கு 22,000 ரூபாய் கிருஷ்ணகாந்திடம் அர்ச்சனா கொடுத்து விடுவாள். அதற்கு என்ன செலவு? அதில் என்ன மிச்சம் என்று கணக்கு கேட்கும் பழக்கம் இருவருக்கம் இல்லை. கிருஷ்ணகாந்திற்கு அதிகம் என்று படும். எனவே பணத்தைப் பற்றி- கிருஷ்ணகாந்தோ சௌதாமணியோ - சத்தீஸிடமோ அர்ச்சனாவிடமோ பேசமாட்டார்கள்.

குடும்ப வரவு செலவுகள் இப்போது கிருஷ்ணகாந்திடம். சௌதாமணி தனக்கு எந்த பொறுப்பும் வேண்டாம் என்று சொல்லிவிட்டாள்... இருந்தாலும் அவளுக்கு தெரியாமல் கிருஷ்ணகாந்த் ஒரு ரூபாய் கூட செலவழிக்க மாட்டான்.

கிருஷ்ணகாந்திற்கு என தனி செலவுகள் மிகவும் சுருங்கிவிட்டன. பத்திரிகைகள். சி.டி க்கள் இதுதான் அவன் செலவு. காலை நேரங்களில் நடைபயிற்சி.. மாலை நேரங்களில் நண்பர்களை சென்று சந்திப்பது. இதுதான் அவன் வாழ்க்கை. மற்றபடி வீட்டிற்குள்ளேயே எப்போதும் இருப்பான்..

இப்போது பகலில் கொஞ்சம் தூங்குவதும் பழக்கமாகி இருந்தது... குடும்பம் , நட்பு, உறவுகள், - இது தவிர வேறு ஒரு உலகம் இல்லாதது போல ஒரு தோற்றம் உருவாகியிருந்தது. .. சௌதாமணி மட்டும் அடிக்கடி கோயிலுக்க போய்க் கொண்டு இருந்தாள்.

ஒரு நாள் உணவு 9.45க்கு முடிந்தது. அர்ச்சனா சௌதாமணியிடம் “அத்தே இங்கே வாங்க” என்று , சௌதாமணியை தனியே அழைத்தாள். “என்னம்மா! என்று சௌதாமணி அவளுடன் சத்தீஸ் அர்ச்சனாவின் அறைக்கு சென்றான். கதவுகள் தாழிடப்பட்டன., “ஒன்னுமில்லே அத்தே நாங்கள் சாயந்திரம் நாங்க ரெண்டு பேரும் டாக்டரை பாத்துட்டு வந்தோம் கன்பர்ம் ஆயிடுச்சு .. நான் மாசமா இருக்கேன் ...” என்றாள்.

சௌதாமணிக்கு உலகமே புதிய விதத்தில் தெரிந்தது. மகிழ்ச்சி பெருவெள்ளம் முகத்தில் ஒடியது. .. மெதுவாக அர்ச்சனாவை அணைத்து உச்சி மோந்தாள். .. அர்ச்சனா வெட்கத்தோடு ஹாலுக்குள் நுழைந்தாள்.

சத்தீஸ் இலேசான புன்னகையோடும், கொஞ்சம் தலை குனிந்தும் அமர்ந்து இருந்தான்.

சௌதாமணி - கிருஷ்ணகாந்த்தின் காதில் விஷயத்தை கூறினான். கிருஷ்ணகாந்த் மெய்சிலிர்த்து போனான்... அத்தனை மகிழ்ச்சி அவனுக்கு. அர்ச்சனாவின் வீட்டிற்கு தகவல் தரப்பட்டது. அர்ச்சனாவின் பெற்றோர், சகோதரர்கள் வந்துவிட்டார்கள். இனிப்பு பலகாரங்கள் குவிந்தன.

சிறுநகருக்கு தகவல் தரப்பட்டது. மயூரநாதன் உட்பட அத்தனைபேரும் வந்து பார்த்துவிட்டு போனார்கள். அர்ச்சனாவுக்கு நாணம் தாங்க முடியவில்லை.

ஆனாலும் அவள் அலுவலகம் போவதை தவிர்த்து விடவில்லை. 7வது மாதம்தான் பணிக்கு போவதை நிறுத்தினாள். வளைகாப்பு சீமந்தங்கள் முடிந்தன. மருத்துவர் குறித்த நாளில், அர்ச்சனாவின் தந்தை வீட்டில், தாய் அருகு இருக்க அவளுக்கு ஆண் குழந்தை பிறந்தது.

எந்த குறையும் இல்லை... குழந்தையைப் பார்த்துவிட்டு வந்து சௌதாமணியும் கிருஷ்ணகாந்தும் மகிழ்ச்சியில் மூழ்கிப் போனார்கள்.

# 26. விதியின் ரதங்களில் பயணம்.

வருடம் 2007

நான்கு வருடங்கள்! காலம் சில போழ்து வேகமாகவும், சிலசமயம் வேகமாவும், சில சமயம் ஊர்ந்தும், சில சமயம் மிக வேகமாகவும்.. நகர்ந்து செல்லும் போலும்.

ஆரம்பத்தில் புதிய குழந்தைக்கு பேர் வைப்பதில் ஒரு போட்டியே நிகழ்ந்தது. சம்பத் தன் தந்தையின் பெயரான சண்பகராமன் பெயரை வைக்க வேண்டும் என கூறினார். கிருஷ்ணகாந்திற்கோ செல்வக்குமார் என பெயரிட வேண்டுமென ஆசை. சத்தீஸுக்கும் அர்ச்சனாவிற்கும் ரித்தீஸ் என்று பெயரிட வேண்டுமென்று ஆசை. கடைசியல் ரித்தீஸ்குமார் என்று பெயர் இடப்பட்டது..இது நடந்து நான்கு வருடங்கள் ஓடிவிட்டது. ரித்தி என அர்ச்சனா கூப்பிட ஆரம்பித்தாள். சத்தீஸும் அப்படியே கூப்பிட்டுக் கொண்டிருந்தான். கிருஷ்ணகாந்த்தும் சௌதாமணியும் குமார் என்றே கூப்பிட்டார்கள்.

பின் அர்ச்சனா மூன்று மாதத்தில் அலுவலகம் செல்ல ஆரம்பித்து விட்டாள். குழந்தையின் வேலைகளை சௌதாமணியே பார்த்துக் கொண்டாள். உரிய நேரத்தில் அவனுக்கு உணவு ஊட்டுவது , விளையாட்டு காட்டுவது, மற்ற பராமரிப்பு வேலைகள் அனைத்தும் சௌதாமணியுடையதுதான்.

பலா சமயங்களில் கிருஷ்ணகாந்த் சமையல் வேலைகளையும் சேர்த்து கவனித்துக் கொண்டான். பேரனோடு கொஞ்சி விளையாடுவதில் அவனுக்கு அப்படி ஒரு சந்தோசம்.

மேலும் ஒரு மாதம் ஒடி விட்டது. இது குமாருக்கு 4வதுமாதம். வழக்கம்போல அர்ச்சனா சௌதாமணியிடம் பணம் கொடுத்தாள். எண்ணிப் பார்த்தாள், 50,000 இருந்தது. “இது என்ன 5000 அதிகமாக இருக்கிறது?” என்றாள் சௌதாமணி…“இருக்கட்டும் அத்தே-குழந்தை இருக்கிறான் - இல்லையா?” என்றாள் அர்ச்சனா.

சௌதாமணிக்கு கோபம் வந்துவிட்டது.” நான் என்ன உன் குழந்தைக்கு ஆயாவா? எங்களிடம் பணம் இல்லையா? குழந்தையின் செலவுகளை நாங்க பார்த்துக்கமாட்டேமா? - ஏன் சத்தீஸும் பிரிச்சு பரிச்சு ஒரே வீட்டிலேயே கணக்கு பார்க்கிறீங்க.. உங்க பணமே வேண்டாம். நாங்களே குடும்ப செலவு அத்தனையும் பார்த்துக்கிறோம் என்று பணக்கவரை அப்படியே தள்ளி வைத்தாள் சௌதாமணி.